**நானாவித வெளிநாட்டு உதவியளித்தல் (46 பாலங்களை புனரமைத்தல்) செயற்திட்டம் - 2020**

நானாவித வெளிநாட்டு உதவியளித்தல் (46 பாலங்களை புனரமைத்தல்) செயற்திட்டத்தின் 2020 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பிரான்ஸ் இன் நெட்டிக்சிஸ் (NATIXIS) வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2012 நவம்பர் 05 ஆம் திகதிய பீ92 0ஏஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு கருத்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை (ஆர்டிஏ) அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. ஆரம்ப கட்டத்தில் இலங்கைக்கு 46 இரும்பு பாலங்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் கடன் பயன்பாட்டில் கானப்பட்ட சேமிப்பினை பயன்படுத்தி மேலும் 04 பலங்கள் அதனுடன் சேர்க்கப்பட்டிருந்தது. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 7,564 மில்லியனுக்குச் சமமான 45.80 மில்லியன் யூரோவானதுடன் அதில் ரூபா 3,642 மில்லியனுக்குச் சமமான 22.05 மில்லியன் யூரோ நெட்டிக்சிஸ் வங்கியினால் வழங்க உடன்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2013 ஜுலை இல் ஆரம்பித்திருந்ததுடன் 2015 ஜுலையில் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. இருப்பினும், காணிகளின் கொள்வனவு பூர்த்திசெய்யப்பட்டிராததுடன் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 வரை தயாரிக்கப்பட்டு கணக்கய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

## 1.3 அபிப்பிராயம்

செயற் திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயா-ாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது

## 2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| செயற்திட்டமானது 2017 ஆம் ஆண்டு பூர்த்திசெய்யப்பட்டிருந்தும், செயற்திட்டமானது முடிவுறுத்தப்பட்டு முடிவுறுத்தல் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்திருக்கவில்லை. எனவே, செயற்திட்ட கண்காணிப்பு பிரிவு பராமரிக்கப்படுவதுடன் ஒரு தொகை பணம் அதன் மீது தேவையற்றதாக செலவிடப்படுகின்றது. | உடன்பட்டனர். செயற்திட்டத்தின் நிர்மான வேலை 2017 இல் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன, ஆனால் காணி கொள்வனவு கொடுப்பனவுகள் 2020 ஆம் ஆண்டு வரை செய்யப்பட்டிருந்ததுடன் அனைத்து பொறுப்புக்களும் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டிற்கான செயற்திட்டத்தின் மூடும் கணக்குகளை தயாரிக்க தீர்மானிக்கப்பட்டது. | செயற்திட்டத்தின் நிர்மான வேலைகள் பூர்த்தியானதன் பின்னர் உடனடியாக செயற்திட்டத்தினை மூடவும் மூடும் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.1 காணி சுவிகரிப்பு மீதான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், செயற்திட்டத்திற்காக 17 அரச காணித்துண்டுகள் உள்ளடங்களாக 224 காணித்துண்டுகளை கொள்வனவு செய்ய பட்டியலிடப்பட்டிருந்தது. 87 காணித்துண்டுகளிற்காக ரூபா 33.40 மில்லியன் தொகையான இழப்பீடும் இழப்பீட்டினை கொடுத்து தீர்ப்பதில் தாமதம் காரணமாக அதன் மீது ரூபா 5.66 மில்லியன் தொகையான வட்டியும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தினால் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் 2013 ஜூலையில் ஆரம்பிக்கப்பட்டு 7 1/2 வருடங்கள் பூர்த்தியடைந்திருந்தும், செயற்திட்டமானது 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 58 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் 120 காணித்துண்டுகளின் காணிசுவீகரிப்பினை பூர்த்தி செய்யமுடியாமலிருந்தது. மேலும், 8 காணித்துண்டுகள் மாத்திரமே 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | உடன்பட்டனர். காணி சுவீகரிப்புடன் தொடர்புபட்டிருந்த நிளஅளவை திணைக்களம் மற்றும் மதிப்பீட்டு திணைக்களம் என்பவற்றில் ஒரு தாமதம் காணப்பட்டது. | இலக்கிடப்பட்ட திகதிகளில் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை பூர்த்திசெய்ய பிரதேசசெயலகங்கள், நிளஅளவைதிணைக்களம் மற்றும் மதிப்பீட்டு திணைக்களத்துடன் முறையான ஒருங்கிணைப்பை வைத்திருத்தல் வேண்டும். |